1979 பிப்ரவரி 28]

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் தற்போது 5,5 மீட்டர் அகலம் உள்ளதாக இருக்கிறது, இதை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இல்லாத விதத்தில் அமைக்க வேண்டும் என்றால் ஏழு மீட்டர் அகலமுள்ளதாக இருக்க வேண்டும். அதற்கான முறையில் வருங்காலத்தில் இருக்கின்ற நிதிநிலைமைக்கு ஏற்ப இப்படிப்பட்ட வேலைகளை எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வ. துலுக்காணம் : இந்தப் பாலத்தை அகலப்படுத்தாமல் இருப்பதால் வெள்ளம் தடுக்கப்படுகிறது, ஆகவே, எந்தவித தடையும் இல்லாமல் தண்ணீர் சீராக வருவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு, சி, பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்,

## திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள ஏரிகள்,

*வினா எண், 153—திரு. துரைமுருகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் செட்டேரியில் ஓர் அணை கட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமாக முனிவூர் ஏரி, ஜெயப் புரம் ஏரி, ஆண்டி அப்பனூர் ஏரி, சந்திரபுரம் ஏரி ஆகியவைகளில் நீர்வரத்து பாதிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இந்த ஏரிகளுக்குப் போதுமான நீர் இந்த நீர்த் தேக்கத்தில் கட்டியுள்ள ஆற்று மதகு மூலம் விடுவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1975-ல் பெய்த பெருமழையினால் அணை நிரம்பி இந்த ஏரிகள் பாதிக்கப்படவில்லை. அதன் பிறகு சரிவர மழை இல்லாமல் அணையில் முழு அளவு நீர் நிரம்பவில்லை. ஆதலின் இதன் கீழுள்ள ஏரிகள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளன.

(இ) இந்நீர்த் தேக்கத்திட்டத்தின் செயல் முறைகளை இன்னும் குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகள் கண்காணித்து அதன் முழு பலன்களையும் அறிந்த பின்னர் அதில் ஏதேனும் இடர்ப்பாடுகள் இருந்தால் அவற்றின் மேம்பாட்டிற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த சேட்டேரி அணையினால் கீழேயுள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வருவதில்லை, இந்த அணைக்கும் சரியாக தண்ணீர் வருவதில்லை, ஆகவே இதை அதிகப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயற்கையாக மழை அதிகமாக இருந்தால் அதிகமாக தண்ணீர் வரும், (சிரிப்பு),

திரு. எம். ஏ. லத்தீப் : பெரு மழை ஏற்பட்ட நேரத்திலும் இந்த ஏரிகளில் தண்ணீர் நிறையவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், மேலும் இதிலுள்ள சப்ளை வாய்க்கால் எல்லாம் தடைபட்டு இருக்கிறது, இருக்கின்ற நீர் ஆதாரங்களும் தடைபட்டிருக்கிறது, ஆகவே இதற்கான நீர் ஆதாரங்களை சீர்படுத்தி, தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமானால் மழைக் காலத்தில் இந்த ஏரிகளில் தண்ணீர் தேங்குவதற்கு வழி ஏற்படும், ஆகவே அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ? இதை மாநிலம் முழுவதும் செய்வதற்கும் அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியில் 1975-ம் ஆண்டு பெய்த பெருமழையில் தண்ணீர் நிரம்பியது, அதற்குப்பிறகு தண்ணீர் நிரம்பவில்லை, அதற்காக 'ரிவர் ஸ்லூயிஸ்' ஏற்படுத்தி அதன் மூலமாக கீழே உள்ள சந்திராபுரம் போன்ற ஏரிகளில் தண்ணீரை நிரப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன, அதேபோல் தமிழகத்தில் பல 'ரிவர் ஸ்லூயிஸ்' ஏற்படுத்துவதற்கும் அரசு முயற்சிகள் எடுத்து வருகின்றது.

திரு. பெ.சு. திருவேங்கடம் : இந்த அணையின் கீழ் இருக்கின்ற இரண்டு மூன்று ஏரிகளில் அடிக்கடி தண்ணீர் நிரம்புவதில்லை, இப்படி ஏரிகளில் தண்ணீர் நிரம்பாத காலங்களில் இதிலுள்ள விவசாயிகளுக்கு ஏதாவது சலுகைகள், நிவாரணம் அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின் கீழ் உள்ள ஏரிகளில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு தண்ணீர் எந்த அளவுக்கு வருகின்றது என்பதை கண்காணித்து பரிசீலித்த பின்னால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது,